2004 பிப்ரவரி 12]

53—

அர்ச்சகர்களுக்கு வீடு கட்டுதல்

***33108—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு அரசு சார்பில் வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களில் சொந்த வீடு மற்றும் திருக்கோயில் குடியிருப்பு வசதி இல்லாத 6 அர்ச்சகர்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மூலம் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு தற்சமயம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2 அர்ச்சகர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் பக்தர்களுக்கு அன்னதானம், ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் என இந்து சமய அறநிலையத் துறை மூலமாக பல புரட்சிகர சாதனைகளைப் புரிந்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும், கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சாதகமான பதிலுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மாவட்ட மக்களுடைய சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, புதுக்கோட்டை மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஆலயங்களிலே பணிபுரியக்கூடிய அனைத்து அர்ச்சகர்களுக்கும் இதுவரை எத்தனை வீடுகள் கட்டிக்

கொடுக்கப்பட்டு இருக்கின்றன? இனி வருங்காலத்தில், பணிபுரிந்துகொண்டிருக்கக்கூடிய அனைத்து அர்ச்சகர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 45 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 33 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் போதுமான நிதி இல்லாத நிலையில் பணிகள் தடைபட்டுள்ளன. இத்திட்டத்திற்காக கூடுதல் நிதி பெற்று இப்பணிகளை விரைவில் நிறைவு செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 4 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தேனி மாவட்டத்தில் ஒரு வீடு கட்டப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் 15 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கரூர் மாவட்டத்தில் 2 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் 26 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 24 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில் 45 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 33 வீடுகள் அர்ச்சகர்களுக்காக கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.

கலைக் கல்லூரி

***23536—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—